RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1354

OPEN ACCESS

# திணைக்கோட்பாட்டு நோக்கில் நெடுநல்வாடை ஒரு அகப்புற நூல்

ரா. ஆனட் இன்பென்டா [அ, *], சிவச்செல்வன் [அ]

[அ] தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி-620017, தமிழ்நாடு, இந்தியா.

# Nedunelvaadai, - An Agam book from the perspective of Thinai Theories

R. Annet Infenta [a, *], P. Siva Selvan [a]

[a] Department of Tamil, Bishop Heber College (Autonomous), (Affiliated with Bharathidasan University), Tiruchirappalli-620017, Tamil Nadu, India

* Corresponding Author: annetinfanta1997@gmail.com

Received: 21-06-2022
Revised: 22-08-2022
Accepted: 29-08-2022
Published: 28-11-2022

## ABSTRACT

The Sangam literature stands out as the classical literature of Tamil with its own uniqueness. Sangam literature can also be called Thinai literature. Tolkappiyar interprets the meaning of Thinai as a discipline. This discipline can be divided into Agam and Puram. Of these, the Agam discipline deals with the life of love, and the Puram discipline deals with the context of life, such as country-based warfare and heroism. The basic natural environment required by man is the source of the formulation of the theory of Thinai. This principle serves as a tool for distinguishing between the Agam and the Puram of the disciplines sung in a verse. On the basis of this, this Thinai theory has been introduced into the Patthuppaattu books of Sangam literature and examined in Nedunelvaadai, which consists of Agam-Puram concepts. It has been found out which Thinai prevails by quoting both the Thinai messages. It was examined here that Nedunelvadai is an Agam-Puram book containing the messages of the two Thinais since Nakkiran has mentioned the original messages of the Agatthinai and the symbolic flower "Vembu" for the Purathinai.

**Keywords:** Nakkirar, Pandiyan Nedunchezhiyan, Suffering, War Victory, Thinai Kotpadu, Loneliness

## முன்னுரை

தொன்மைத் தமிழினத்தின் வாழ்வியல் கூறுகளை தொல்லியல் சான்றுகளைக் காட்டிலும் பண்டையத் தமிழ் செவ்விலக்கியங்கள் நமக்கு தெளிவாகப் பாடம் உணர்த்துகின்றன. அவ்விலக்கியங்கள் பல கோட்பாடுகளையும் மெய்ப்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு இயற்றவும் வரையறுக்கவும் பட்டவை என்பது தெளிவு, அவற்றுள் திணைக் கோட்பாடு என்பது மிக நுணுக்கமானதோர் வரையறையைக் கொண்ட ஒன்று, அதன் வழி நின்று சங்க இலக்கியத்தின் பத்துப்பாட்டில் கவின் மிகு பாடலான நெடுநல்வாடையை ஆய்வதே இக்கட்டுரையாகும்.

## ஆய்வு நோக்கம்

`இந்நூல் அகத்திணைக் கூறுகளையும், புறத்திணைக் கூறுகளையும் ஒரு சேரக் கொண்டு இயற்றப்பெற்றதாகும். அகம், புறம், அறம், திணை, அழகியல், போன்ற இலக்கியக் கோட்பாடுகளை இந்நூலுக்குள் பொருத்தி ஆய்வு மேற்கொள்ள இடம் தருகிறது.

'கிளவித்தலைவன் பெயர் வரைந்துரையார்' என்னும் விதிப்படி இது அகத்திணையாகாது என்பார் (Pasupathi, 2010). அதேபோல் போர் பாசறை பற்றிப் பாடுவதால் மட்டுமே இதை புறத்திணைப் பாடல் என்றோ வைக்கவியலாது என்பார். இதே போன்று "நெடுநல்வாடை அகப்பாட்டன்று" என்பது நச்சினார்க்கினியரின் கருத்து என்கிறார் (Sanjeevi, 1973). எனென்றால் 'வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்' என்ற ஒரு அடி இடம் பெற்ற காரணத்தினால் இது பாண்டிய அரசனின் பூவான வேப்பம் பூவினைக் குறிக்கின்றது என இதனை புறத்தினையில் சேர்த்தனர் என்ற செய்தி இலக்கிய உலகம் அறிந்ததே.

திணை மயக்கம் கொண்டு ஒரு நிலையின் கீழ் அடங்காது பல தன்மையைக் கொண்டதாக நெடுநல்வாடை அமைந்துள்ளது. பண்டையத் தமிழரின் திணை வாழ்வியலை நக்கீரர் தான் இயற்றிய நெடுநல்வாடையின் வழியாக மிக அழகாக விளக்கியுள்ளார். அவ்வாறு அமைந்த இந்நூலைத் திணைக்கோட்பாட்டு நோக்கில் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு எல்லை

வரம்பும் (எல்லை), வரையறையும் இல்லாத களம் அமைக்கவியலாது, அது போன்றே ஆய்வும், நெடுநல்வாடையில் தொல்காப்பியர் வகுத்த திணைக்கோட்பாடு, திணைக் கோட்பாட்டுக் கூறுகள் ஆகியவற்றைப் பொருத்தி ஆய்வது இக்கட்டுரையின் எல்லையாகும்.

திணைக்கோட்பாட்டு நோக்கில் நெடுநல்வாடை ஒரு அகப்புற நூல் என்ற இக்கட்டுரை கீழ்க்கண்ட உட்தலைப்புகளாகப் பகுக்கப்பட்டு ஆராயப்படுகின்றது. அவை நெடுநல்வாடை, நூற்குறிப்பு, திணை - திணைக் கோட்பாடு, அகத்திணை செய்திகள், பாலைத் திணை, முல்லைத் திணை, திணை மயக்கம், புறத்திணை செய்திகள், வாகைத்திணை, வஞ்சித்திணை, முடிவுரை என்பனவாகும்.

## நெடுநல்வாடை

சங்க இலக்கியப் பத்துப்பாட்டினுள் ஏழாவது பாட்டாக நக்கீரரின் நெடுநல்வாடை அமைந்துள்ளது. வாடைக்காற்றானது தலைவிக்குத் துயர் தரக்கூடிய நீண்ட நெடிய வாடையாகவும், பாசறையில் தங்கியிருக்கும் தலைவனுக்குப் போர் வெற்றியினைச் சொல்லும் நல்ல வாடையாகவும் இருப்பதால், இந்நூல் நெடிய நல்ல வாடை என்னும் பொருள்படும் நெடுநல்வாடையாயிற்று.

பகை காரணமாகப் போர் மேற்சென்ற தலைவனைப் (பாண்டியன் நெடுஞ்செழியனை) பிரிந்து வருந்தும் தலைவியின் பிரிவுத்துயரை நீக்கும் பொருட்டு செவிலித்தாய், கொற்றவை என்ற பெண் தெய்வத்திடம், தலைவன் பகையை வென்று விரைவில் திரும்பிவர வேண்டும் என வேண்டுவதோடு குளிரின் கொடுமையையும், தலைவியின் துயரினையும், அரண்மணையில் உள்ள ஒவிய அழகையும் விவரிப்பதாகவும் இந்நூல் அமைந்துள்ளது.

## நூற்குறிப்பு

நெடுநல்வாடை மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரரால் எழுதப்பட்ட நூலாகும். 188 அடிகளோடு நேரிசை ஆசிரியப்பாவால் அமைந்த இந்நூலின் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்பது அறிஞர்கள் கருத்து. இந்நூல் அகத்திணையில் பாலையையும் புறத்திணையில் வாகையையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது.

## திணையும் திணைக் கோட்பாடும்

### திணை

சங்க இலக்கியத்தை திணை இலக்கியம் எனவும் வழங்குவர். திணை என்றால் ஒழுக்கம் என்று கூறுவர், காரணம் இது வாழ்க்கையின் முறைமைகளை குறிக்குமென்பதால் ஒழுக்கமாகும்,

அவ்வொழுக்கத்தை, அகம் சார்ந்த ஒழுக்கம், புறம் சார்ந்த ஒழுக்கம்என இரு வகையாகப் பகுப்பர். திணையில் முதன்மையானதும் சிறப்பானதும் அன்பின் ஐந்திணையாகும். அவை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை. இவ்வைந்திணைகளும் முப்பொருட்களை உள்ளடக்கியவை அவையே, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பனவாகும்.

## திணைக் கோட்பாடு

தமிழ் இலக்கியங்களில் வரும் அகத்திணைப் பாடல் இன்ன திணையைச் சேர்ந்தது என்று கொள்வது எப்படி எனத் தொல்காப்பியத்தில் விளக்கப்பட்டுள்ளது. திணையைக் குறிப்பதற்கு முதற்பொருளாகிய நிலத்தை அடிப்படையாகக் கொள்ளாமல், உரிப்பொருளையே அடிப்படையாகக் கொள்வது நெறி. காரணம் உரிப்பொருள் பிற திணைகளோடு மயங்குவதில்லை.

மலை, காடு, ஆறு, கடல் என்னும் நிலப்பகுதிகளும் மயங்குவதில்லை இருப்பினும் ஒரு நிலப்பகுதியில் உள்ள பொருள் மற்றொரு நிலப்பகுதியில் மயங்கும். அன்றியும் எல்லா நிலப்பகுதிகளிலும் ஐந்து உரிப்பொருள்செயல்களும் நிகழும்.

"உரிப்பொருள் அல்லன மயங்குவும் பெறுமே"

என்னும் தொல்காப்பிய பாடல் வழி அதற்குரிய திணையிலேயே உரிப்பொருள் மிகுதியாகப் பொருந்தி வெளிப்படும் என்னும் அடிப்டையில் உரிப்பொருளே அகத்திணையினைத் தீர்மானிக்கும் எனக் கொள்ளலாம்.

## அகத்திணைச் செய்திகள்

### கார் காலம்

"வையகம் பனிப்ப, வலன் ஏர்பு வளைஇ,

பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென"

வையகமே குளிரும் அளவிற்கு வலமாக சுழன்று வரக்கூடிய காற்றின் வழிப் பொய்யாத வானம் புதிய மழையைப் பொழிந்ததென்று சொல்லி செங்கோலும் செங்கொற்றமும் தவறாது இருந்தது பாண்டிய ஆட்சி என்று கார் காலத்தைச் சுட்டியே பாண்டியனின் ஆட்சித் திறனை விளக்குகிறார் புலவர் (Sanjeevi, 1973).

அவ்வாறு பொழிந்த மழையினால் ஏற்பட்ட வெள்ளம் ஆர்ப்பரிக்கும் கடல் போன்ற ஓசையோடு வந்த்து. இதனை "ஆர்கலி" என்னும் சொல்லினைக் கொண்டு புலவர் குறிக்கிறார், அம்மழை வெள்ளத்தால் தாம் வளர்க்கும் காளை மாடுகளோடும் பசுக்களோடும் வேறு இடத்திற்குச் செல்ல வேண்டும் என்பதால் வெறுப்புற்ற வளைந்த கோலினைத் தம் கையிலே கொண்டுள்ள கோவலர்கள் (இடையர்கள்) புலம் பெயர்தலை நினைத்து புலம்பி வருந்தினர், இதனோடு அவர்கள் கழுத்தில் அணிந்திருந்த நீண்ட இதழ்களை உடைய செங்காந்தள் மலர் மாலையிலிருந்த நீர்த்துளிகள் மேனியில் படுவதால், வாட்டமுற்ற அவர்கள் கூட்டங்கூட்டமாக நெருப்பின் மேல் கைகளைக் காட்டி வெப்பமேற்றினர், ஆயினும் குளிரினால் இடையர்களின் கன்னங்கள் நடுங்கிற்று. இவ்வாறு முல்லை நிலத்தில் (திணையின்) பெரும் பொழுதாகிய கார் காலத்தின் தன்மையையும் முல்லை நில மக்களான இடையார்களையும் குளிர் வாட்டியதாகப் புலவர் குறிப்பிடுகின்றார்.

### கூதிர்க்காலம்

மழைக்குப் பின் குளிர் என்பது போன்று, முல்லை பின் குறிஞ்சி என்று வருவது போன்று, முல்லைக்குரிய கார் காலத்திற்குப் பின் குறிஞ்சிக்குரிய கூதிர்க்காலம் வருவதாக விளக்குகிறார் நக்கீரர். குளிரினால் மாடுகள் மேய்தலை மறந்தன, பெண் குரங்குகள் உடல் கூனிப்போய் இருந்தன,

பறவைகள் குளிரால் நடுங்கி மரக்கிளையிலிருந்து கீழே விழுந்தன, கன்றுகளுக்குப் பால் கொடுக்காமல் பசுக்கள் குளிரின் காரணமாக கன்றுகளை உதைத்துத் தள்ளின, இத்தகைய கூதிர்கால இரவு குறிஞ்சி நிலக் குன்றுகளையே குளிர்விப்பனவாக இருந்ததன, இது காதலர்களைப் பிரிந்திருக்கும் மகளிரின் துயரை மேலும் கூட்டியதாக நக்கீரர் விளக்குகிறார். இதனை,

"காதலர்ப் பிரிந்தோர் புலம்ப, பெயல் கனைந்து

கூதிர் நின்றன்றால்"

என்னும் நெடுநல்வாடை வரிகள் உணர்த்துகிறது (Mohan, 2003).

## திணைமயக்கம்

ஒரு திணையின் எல்லைக்கே உட்பட்ட சில பொருட்கள் பிறிதோர் திணையின் கட்டுக்கோப்போடு கலந்து நிற்கவும் கூடும் என்பதை திணை மயக்கம் எனலாம் என்பார் (Mohan, 2003). நெடுநல்வாடையில் எல்லாத் திணைகளைப் பற்றியும் பேசப்பட்டாலும் முல்லைத்திணையின் செய்திகள் அதிகமாகச் சுட்டப்பட்டுள்ளன. அதே சமயத்தில் திணை மயக்கமும் உள்ளது. தொல்காப்பியர் திணைகளுக்கு நூற்பா வகுக்கையில்

"வஞ்சி தானே முல்லையது புறனே"

எனப் புறத்திணையியலில் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியர் கருத்துப்படி முல்லை என்னும் அகத்திணையையும் வஞ்சி என்னும் புறத்திணையையும் இணைத்துக்காட்டியுள்ளார் என்பது விளங்குகிறது (Mohan, 2003). பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்ததென்று முதற்பொருளாகிய கார்காலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால் கோவலர் செங்காந்தள் மாலையை அணிந்து சென்றனர் என குறிப்பிடுகையில் திணை மயக்கம் ஏற்படுவதைக் காண முடிகிறது. எனவே பல்வேறு திணைகள் சுட்டிக் காட்டப்பட்டிருப்பினும் முல்லைத் திணையே முன்னிருத்தி காட்டப்படுவது சிறப்பாகும்.

தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் மண்ணாசையால் படையெடுத்துச் சென்றிருந்ததை நெடுநல்வாடை காட்டுகின்றது, மண்ணாசையால் போரிடுதல் வஞ்சித்திணையாகும். புறத்திணையாகிய வஞ்சித்திணை அகத்திணையாகிய முல்லைத்திணைக்குப் புறனானதாகும். "முல்லை - தலைவி இல்லில் ஆற்றியிருத்தல், வஞ்சி - தலைவன் போர்முனையில் போர் செய்தல்"

## பாலைத் திணை

தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு நெடிதாகத் தோன்றும் வாடையைக் கூறுவதால் இப்பாடல் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் என்னும் உரிப்பொருளுக்குரிய பாலைத் திணையை உணர்த்திற்று. வேற்று நிலத்திற்குப் போய்ப் போரினை வென்ற மன்னனுக்கு இது நல்லதாகிய வாடை ஆயிற்று. இது பாலைத்திணைக்குப் புறனாகிய வாகைத்திணை ஆகும். இதனை,

"வாகை தானே பாலையது புறனே"

என்னும் தொல்காப்பிய வரி எடுத்துரைக்கிறது.

பணைநிலையில் நிற்க வெறுத்த குதிரை தன் உணவாகியப் புல்லைத் தின்று தனிமையின் துயரால் குரலெழுப்பிக் குதட்டும் காட்சி பிரிவினை உணர்த்துவதாக உள்ளது. பிரிவுத்துயரால் தலைவி தனது மார்பில் தாலியைத் தவிர வேறு அணிகலன்கள் அணியவில்லை. ஒப்பனை செய்யப்படாத நெற்றி, பிரிந்த, வறண்ட கூந்தல், மரக்குழை அணியா காதுகள், பொன்வளையணியாது வலம்புரி சங்கினை அறுத்து செய்யப்பட்ட வளையணிந்த கைகள், வாளைமீனின் பிளந்த வாய் போன்று விளங்கும் வளைவினை உடைய மோதிரமணிந்து சிவந்த விரலில் செந்நிறமுடைய நெளி என்னும்

மோதிரமணிந்து "புனையா ஓவியம்" போல அமர்ந்திருந்தாள். கணவனோடு உடனுறைந்த காலத்து விளங்கிய அரசமாதேவியின் தோற்றம், பிரிவுகாலத்தில் வேறுபட்டு விளங்குவதை இச்செய்திகள் விளக்குகின்றன (Mohan, 2003).

## சேடியரும், செவிலியரும் தலைவியைத் தேற்றுதல்

செவிலித்தாய் அரசமா தேவியை நோக்கி "நினக்குத் துணையாக அமைந்தவர் இப்பொழுதே வருகுவார்" என மனத்திற்கு மகிழ்ச்சியைத் தரும் இனிய சொற்களைக் கூறியும் அரசமா தேவி மன அமைதி கொள்ளாமல் மிகவும் கலங்கினாள். அவள் திங்களை உரோகிணியுடன் கண்டவுடன் அவளின் பிரிவுத்துயரின் தாளா அழுகையின் வெளிப்பாடு, புறத்தார் அறியும் வண்ணம், அத்துணை மிகுதியாக இல்லை என்பதை "நீரில் சில தன் செவ்விரலாள் தெறித்தனள்" என்னும் வரிகள் உணர்த்துகிறது. இவ்வாறு அகத்திணை குறித்த பல்வேறு செய்திகள் இந்நூலில் கூறப்பட்டிருப்பதால் ஆய்வாளர்கள் இதனை அகப்பாட்டே என அறுதியிட்டு நிறுவியுள்ளனர் என்கிறார்.

## புறத்திணைச் செய்திகள்

### வஞ்சித் திணை

வஞ்சித் திணை துறைகளுள் கொற்றவை வழிபாடும் ஒன்று. இதனை

"குன்றாச் சிறப்பின் கொற்ற வள்ளையும்"

என்னும் தொல்காப்பிய வரி உணர்த்திற்று (Ilampuranar, 2005). நெடுநல்வாடை பாடல் முழுவதுமாக அரசனின் போர் வெற்றியை வேண்டி சேடியரும், செவிலியரும் கொற்றவையை வழிபடுதாகவே அமைந்துள்ளது. இதனைக் குறிப்பிட்டு, கொற்றவை வழிபாடு நெடுநல்வாடையின் நடு மணியாகப் பதிந்துள்ளது என மு. வரதராசனார் எடுத்துரைக்கின்றார்.

## வாகைத் திணை

தலைவி பிரிவுத்துயரால் வருந்தினாலும் அவளது குறிக்கோள் அரசன் போர்க்களத்தில் வெற்றியெய்த வேண்டுமென்பதாகவே அமைகிறது. இன்பத்தை நுகர விரும்புவோர்க்கு சிறந்த காலமாகிய கூதிர் காலத்தில் கூட இன்பத்தில் வேட்கையின்றி பகைவர் நாட்டிற்குச் சென்று பாசறையில் தங்கிப் போரிடுவது என்பது வீரர்களின் கடைமையுணர்வினைக் காட்டுகின்றது. இங்கு பாண்டியனின் வெற்றியைக் கூறுவதால், புறத்திணைக் கூறாகிய வாகைத் திணை செய்தி கூறப்படுவதாகக் கொள்ளலாம்.

"வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்"

என்னும் வரியில் வேப்பம் பூ மாலையைத் தலைப் பகுதியில் கட்டிய வலிய காம்பினைக் கொண்ட வேலினை படைத்தலைவன் ஏந்தியிருந்தான் என்னும் குறிப்பால் இதை வாகைத் திணையான புறப்பொருட்பகுதியாகக் கொள்ளலாம் (Ilampuranar, 2005).

பாலைத்திணையாய்க் கொள்ளுங்காலும் வாகைத் திணையாய்க் கொள்ளுங்காலும் இப்பாட்டு தொழிற்கூறாகவே அமைந்துள்ளது. மண் ஆசை காரணமாகப் போர் செய்தல் வஞ்சித் திணை எனப்படும். கொற்றவையை வெற்றி வேண்டி வழிபடும் வஞ்சித்திணைப்பகுதியும், வாகை எனவே கொள்ளப்படும். பாலைத்திணை நடுவு நிலைத் திணை அதலால் வஞ்சிப்போரில் பெறப்படும் வெற்றியும் வாகையேயாகும்.

## முடிவுரை

வேம்பு என்ற ஒரு சொல் இல்லையானால் நெடுநல்வாடை முழுவதும் கற்பனையான காதல் பாட்டு எனக் கொள்ளத் தடையிருந்திருக்காது. எனும் மு. வரதராசனாரின் கருத்துப் படி இந்நூலை முழுவதும் அகம் சார்ந்த நூல் எனவோ புறம் சார்ந்து நூல் எனவோ கொள்ளவியலாது அகப்புறக் கூறுகளை ஒருங்கே வாய்க்கப் பெற்ற நூலாக விளங்குவதோடு திணை மயக்கத்திற்கும் உட்பட்டு திணை, அழகியல், உளவியல், மானுடவியல் எனப் பல்வேறு கோட்பாடுகளை உட்புகுத்தி ஆய்வு மேற்கொள்ள களம் அமைத்துத் தருவதாகவும் நக்கீரரின் இந்நெடுநல்வாடை அமைகிறது. நெடுநல்வாடையானது அகத்திணையியல் கூறுகளையும் புறத்திணையியல் கூறுகளையும் ஒரு சேர தன்னகத்தே கொண்ட நூல் என்பது தெளிவாகிறது. அகத்திணையுள் முல்லை மற்றும் பாலைத் திணைக் கூறுகளையும் புறத்திணையுள் வஞ்சி மற்றும் வாகைத் திணைக் கூறுகளையும் நக்கீரர் சிறப்புறக் கூறியுள்ளார். நக்கீரர் பாடலின் தொடக்கத்தில் பொழுது அடிப்படையில் முல்லைத் திணையை உணர்த்தியிருப்பினும் உரிப்பொருள் அடிப்படையில் தலைவின் பிரிவுத் துயரை விளக்கி பாலைத் திணையையே முதன்மைப்படுத்துகிறார். புறத்திணையுள் மண்ணாசையால் போர் புரிதல் என்னும் அடிப்படையில் வஞ்சித் திணையை உணர்த்தியிருப்பினும் போரில் வெற்றி பெறுதல் என்னும் அடிப்படையில் வாகைத் திணையே மேலோங்கி நிற்கிறது. ஐந்திணைச் செய்திகளைக் கூறியிருப்பினும் பாலை மற்றும் வாகைத் திணைக் கூறுகளை முன்னிறுத்திய அகப்புற நூலாக இந்நெடுநல்வாடை தனிச்சிறப்புற்று விளங்குகிறது.

## References

Ilampuranar, (2005) Tholkappiyam- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Mohan, R. (2003) Nedunalvaadai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Pasupathi, M.V. (2010) Semmozhitamizh Ilakkanam, Ilakkiyam, Tamil University, Thanjavur, India.

Sanjeevi, N. (1973) Sanga illakkiya aarachchi attavanakal, Madras University, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License